# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2015 - 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழர் பகுத்துப் போற்றிய கலைகளின் எண்ணிக்கை

அ) 60 ஆ) 64 இ) 62 ஈ) 63

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. கயிலைவன்னியன் ஆட்சிக் காலத்தில் வன்னியின் பேரரசாக மதிக்கப்பட்டது

அ) முள்ளியவளை ஆ) பண்டாரிக்குளம்

இ) முறிப்பு ஈ) பனங்காமம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. **பாடி** என்பது

அ) வினைமுற்று ஆ) பெயரெச்சம்

இ) வினையெச்சம் ஈ) வினையடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. வன்னி மக்களின் வீரத்தால் **வன்னி** பெற்ற பெயர்

அ) அடங்காப்பற்று ஆ) பனங்காமம்

இ) வணங்காமண் ஈ) வணங்காமுடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. சாமப்பண் பாடி இறைவனை மகிழ்வித்த மன்னன்

அ) இராவணன் ஆ) இராசராசசோழன்

இ) சங்கிலியன் ஈ) எல்லாளன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. குணப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) இருக்கை ஆ) இலை இ) வட்டம் ஈ) கிழமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. மஞ்சட் குளித்து மாயப்பொடி பூசி நிற்கும் **பூ**

அ) தாமரை ஆ) சூரியகாந்தி இ) மல்லிகை ஈ) அல்லி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பெக்சி அடிகளார் பிறந்த நாடு

அ) யேர்மனி ஆ) இந்தியா இ) பிரான்சு ஈ) இத்தாலி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. இரட்டைக்கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நேர்நேர் ஆ) குபுகுபு இ) ஏறிஏறி ஈ) ஊர்ஊர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. ஒருமை பன்மை என்பன

அ) காலம் ஆ) இடம் இ) எண் ஈ) திணை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. தோற்கருவிகளில் ஒன்று

அ) புல்லாங்குழல் ஆ) யாழ் இ) மேளம் ஈ) வீணை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. ஒரு சொல்லியத்தில் கருத்து முற்றுப்பெற்று நிற்கும் இடம்

அ) பயனிலை ஆ) எழுவாய்

இ) செயப்படுபொருள் ஈ) அடைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. வன்னியில் பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடம்

அ) பண்டாரிக்குளம் ஆ) சேந்தன்குளம்

இ) மாங்குளம் ஈ) பெரியபுளியங்குளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. சேர்ந்தாரைக் கொல்லி என்று வள்ளுவர் குறிப்பிடுவது

அ) வெள்ளத்தை ஆ) காற்றை இ) சினத்தை ஈ) நீரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. முரசு கட்டிலில் உறங்கிய புலவர்

அ) இளங்கோவடிகள் ஆ) மோசிகீரனார்

இ) ஔவையார் ஈ) கபிலர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. ஒன்றாகத் திரண்டால் வலிமை பெறும் கொடி

அ) அடம்பன் ஆ) மல்லிகை இ) முல்லை ஈ) தாமரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. சென்றான் என்ற வினைமுற்றின் பெயரெச்சம்

அ) சென் ஆ) சென்று இ) செல் ஈ) சென்ற

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. வன்னிப் பெருநிலப்பரப்பு தமிழர் பகுதியாகும். இச்சொல்லியம்

அ) ஏவல் ஆ) கூற்று இ) மெய்ப்பாடு ஈ) வினா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. தமிழ்மொழியின் முதலாவது அகரமுதலி

அ) பொருளியல் அகராதி ஆ) ஒப்பியல் அகராதி

இ) சதுரகராதி ஈ) செந்தமிழ் அகராதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. உயர்திணைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) ஓடியது ஆ) பறந்தன இ) வந்தான் ஈ) நீந்தியது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. **குறள் :-**

அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்

_____________________ ரேனு மிலர்

அ) உன்னுடைய ஆ) என்னுடைய

இ) தன்னுடைய ஈ) அவனுடைய

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. தீயன செய்தோர் துன்புறுவர் என்னும் கருத்தை உணர்த்தும் பழமொழி

அ) அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.

ஆ) அடாது செய்தவர் படாது படுவர்.

இ) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

ஈ) இரக்கப் போனாலும் சிறக்கப் போ.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. **பழனம்** என்றால்

அ) வயல் ஆ) சேறு இ) மாடு ஈ) கலப்பை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. பொறாமை உள்ளவனிடம் இது இருக்காது என வள்ளுவர் கூறுகின்றார்.

அ) அறிவு ஆ) உண்மை இ) செல்வம் ஈ) புகழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. **வருகின்றனர்** என்பது

அ) நிகழ்காலம் ஆ) இறந்தகாலம்

இ) முடிந்தகாலம் ஈ) எதிர்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. **குழந்தை கீழே விழுந்து ......** என்பது

அ) சொல்லியம் ஆ) சொற்றொடர்

இ) வினைமுற்று ஈ) எச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. **தடங்கரை** என்பதைப் பிரித்தால்

அ) தடங் + கரை ஆ) தடம் + கரை

இ) தட + கரை ஈ) தடங்க் + கரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. குரங்குகள் உழவர்களை நோக்கி எறிந்தது

அ) இளநீர் ஆ) பலாக்கனி இ) சங்கு ஈ) கல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பலர்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) அவன் ஆ) அவள் இ) அவை ஈ) அவர்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. இசைத்தூண்கள் காணப்படுவது

அ) மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில்

ஆ) தஞ்சைப்பெருங் கோவிலில்

இ) காமாட்சி அம்மன் கோவிலில்

ஈ) விசாலாட்சிஅம்மன் கோவிலில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2 . பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

மாலைக்காட்சி மனதிற்கு இன்பம் தரும் ஓர் இயற்கைக் காட்சியாகும். பரந்து விரிந்த தனது ஒளிக்கதிர்களைச் சுருக்கிக்கொண்டு கதிரவன் மறையத் தொடங்கும். அவ்வேளை கதிரவன் தங்கத்தகடுபோல் பளபள என மின்னும். அடிவானம் செக்கச்சிவந்து அழகாகக் காட்சியளிக்கும். இருள் எங்கும் மெல்லமெல்லப் பரவத் தொடங்கும். தாமரைமலர்கள் கூம்ப அல்லிமலர்கள் இதழ் விரிக்கும். முல்லைமலர்கள்போல் வானத்தில் விண்மீன்கள் கண்சிமிட்டிச் சிரிக்கும். பறவைகள் தத்தம் கூடுகளை நோக்கித் திரும்பும். ஆனிரையும் ஆடுகளும் தொழுவங்களை நோக்கி விரையும். விளையாடிக் களித்த சிறுவர்கள் வீடு நோக்கிச் செல்வர். மாலை மலரும் மல்லிகையும் முல்லையும் எங்கும் இனிய மணத்தைப் பரப்பத் தொடங்கும். பகல் முழுக்க உழைத்துக் களைத்த மாந்தரும் வீடு நோக்கிச் செல்வர். மாலைப் பொழுது மெல்ல நகர்ந்து செல்லும். இம்மாலைக்காட்சி மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.

1. எவை தொழுவங்களை நோக்கி விரையும்?

______________________________________________

______________________________________________

2. ஒளிக்கதிர்களைச் சுருக்கிக்கொண்டு எது மறையத் தொடங்கும் ?

______________________________________________

______________________________________________

3. வானத்தில் கண்சிமிட்டிச் சிரிப்பன எவை?

______________________________________________

______________________________________________

4. எவை இனிய மணத்தைப் பரப்பத் தொடங்கும்?

______________________________________________

______________________________________________

5. செக்கச்சிவந்து அழகாகக் காட்சியளிப்பது எது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. நுண்கலைகள் என்று அழைக்கப்படுவன யாவை?

______________________________________________

______________________________________________

2. மருதுபாண்டியன் விளையாடச் சென்ற இடம் எது?

______________________________________________

______________________________________________

3. கயிலைவன்னியனது ஆட்சி எதுவரை பரந்திருந்தது?

______________________________________________

______________________________________________

4. **இலக்கியஇன்பம்** என்ற பாடத்தில் வயலோரத்து மேடுகளில் எவை நிறைந்து காணப்படுகின்றன?

______________________________________________

______________________________________________

5. வன்னியின் இடங்கள், குளங்களின் பண்டைய பெயர்கள் காட்டுவது என்ன?

______________________________________________

______________________________________________

6. திருக்குறளின் சிறப்புப் பெயர்கள் இரண்டினைத் தருக.

______________________________________________

7. ஏழைப்புலவனுக்கு நாடாளும் மன்னன் கவரி வீசியது ஏன்?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொல்லைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

## இன்சொல் பேசுவோம்

| நெஞ்சம் | சொற்கள் | மணம் | கெட்டு | தமிழில் |
|---|---|---|---|---|

அழகு முல்லை அரும்பு இதழ்
அவிழ ____________________ கமழுமே
பழகு ____________________ பேசினால்
அமிழ்தாய் என்றும் இனிக்குமே

பிறரின் ____________________ புண்படப்
பேசுகின்ற போதிலே
உறவு ____________________ ப் போய்விடும்
உள்ளம் அதனால் வாடிடும்

கனியை விட்டுக் கசந்திடும்
காயை வீணில் கடிப்பதோ
இனிய ____________________ இருக்கையில்
இழிந்த சொல்லை உரைப்பதோ

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1) பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்?

______________________________

பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

காலப்பெயர் :- ______________________________

தொழிற்பெயர்:- ______________________________

2) தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

ஆனி :- ______________________________

______________________________

ஆணி :- ______________________________

______________________________

3) பின்வருவன ஒவ்வொன்றிற்கும் மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.

இரட்டைக்கிளவி :- ______________________________

அடுக்குத்தொடர் :- ______________________________

4) பின்வரும் சொற்களின் திணை, பால், இடம் என்பவற்றைத் தருக.

| சொல் | திணை | பால் | இடம் |
|---|---|---|---|
| நாம் | | | |
| ஓடுகின்றன | | | |

5) பின்வரும் வினைமுற்றுகளின் வினையடி வினையெச்சம் என்பவற்றைத் தருக.

| வினைமுற்று | வினையடி | வினையெச்சம் |
|---|---|---|
| கண்டான் | | |
| எழுந்தாள் | | |
| கூவுகின்றன | | |

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

விளையாட்டுகள் உடல் நலத்தையும் உளமகிழ்வையும் தருகின்றன. விளையாட்டுகள் வீரத்தையும் ஆற்றலையும் வளர்க்கும். விளையாட்டுகள் தனிவிளையாட்டு, குழுவிளையாட்டு என இரு வகைப்படும். உலகளவில் விளையாடப்படும் ஒலிம்பிக் விளையாட்டில் இவ்விருவகை விளையாட்டுகளும் இடம்பெறுகின்றன.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✡ வீரஞ்செறிந்த வன்னி மண்ணும் தமிழரசுகளும்.
- ✡ தலையைக்காத்த தமிழ்.
- ✡ மழைநாள்.

புள்ளிகள் 20